கோவில்பட்டி நகராட்சி

**மன்மத – ஹேவிளம்பி வருடம் கார்த்திகை மாதம் 14–ஆம் ஆங்கில வருடம் நவம்பர் மாதம் 30.11.2017–ம் தேதி வியாழன் கிழமை விவாதித்து முடிவெடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ள சாதாரண கூட்டப் பொருள்களின் விபரம்**

சாதாரணக்கூட்டப்பொருள்

| மன்ற கூட்ட தேதி | வரிசை எண் மற்றும் மன்றப்பொருள் | மன்றத் தீர்மானம் |
|---|---|---|
| 30.11.2017 | **பொருள் எண்: 1**<br>கோவில்பட்டி நகராட்சியில் பணிபுரியும் சீருடை பணியாளர்களுக்கு 2017–18ஆம் ஆண்டுக்கு வழங்க வேண்ண்ய சீருடை மற்றும் தையல் கூலிக்கு உத்தேச செலவு தொகை ரூ.6,00,000/–க்கு மன்றம் அனுமதி கோரப்படுகிறது.<br>அ.கு:- மன்றம் அனுமதிக்கலாம். | **2834.**அங்கீகரிக்கப்படுகிறது. |
| | **பொருள் எண்: 2**<br>இந்நகராட்சியில் கணினி பிரிவில் உள்ள 0.5KVA UPS மின்சாரம் தடைபட்டவுடன் இயங்காத நிலையில் உள்ளது. எனவே மேற்படி UPS–ல் உள்ள பேட்டரிகளை மாற்றி சர்வீஸ் செய்து தருவதற்கான உத்தேச மதிப்பீடு செலவினத் தொகை ரூ.80,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | **2835 .**அங்கீகரிக்கப்படுகிறது. |
| | **பொருள் எண்: 3**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.26, வீரவாஞ்சிநகர் மெயின்ரோடு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அருகில் உள்ள மோட்டார் அறையுடன் கூடிய ஆழ்துளை கிணற்றில் இயங்கி வந்த 3H.P. நீர்மூழ்கி மோட்டார் பழுதடைந்து உள்ளதால் புதிதாக 3H.P.நீர்மூழ்கி மோட்டார் வாங்கி பொருத்துவதற்கும் அதற்கான உத்தேச மதிப்பீடு செலவினத் தொகை ரூ.38,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | **2836.** அங்கீகரிக்கப்படுகிறது. |
| | **பொருள் எண்: 4**<br>கோவில்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட பார்க் கிழக்கு மற்றும் மேற்குத் தெருவில் உள்ள வடிகால் பழுதடைந்து இடிந்த நிலையில் உள்ளது. மேலும் குடிநீர் விநியோக பகிர்மான குழாயில் உள்ள வால்வுகளுக்கு தொட்டி முறையாக அமைக்கப்படவில்லை. எனவே மேற்படி தெருக்களில் உள்ள வடிகால் சீர்செய்து மராமத்துப்பணி மேற்கொள்ளவும் வால்வு தொட்டிகள் கட்டுவதற்கும் உத்தேச மதிப்பீடு ரூ.1,05,000/–க்கு தயாரிக்கப்பட்டுள்ளது மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அ.கு:- குடிநீர் வழங்கல் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.6342/2017/எச்1) | **2837.** அங்கீகரிக்கப்படுகிறது. |
| | **பொருள் எண்: 5**<br>கோவில்பட்டி நகராட்சி நடராஜபுரம் பகுதியில் பகுதி–II திட்டத்தின் கீழ் நவீன எரிவாயு தகனமேடை 30.05.2013 முதல் சக்தி பவுண்டேசன் தொண்டு நிறுவனம், இராமநாதபுரம் மூலம் பராமரிப்பு செய்யப்பட்டு வந்தது. இந்நிலையில் பராமரிப்பு பணி | **2838.** அங்கீகரிக்கப்படுகிறது. |

மேற்கொள்ள நிபந்தனைகளுடன் அனுமதி அளிக்கப்பட்டும் முறையாக பராமரிக்கப்படாததால் உரிய விளக்கம் கோரப்பட்டது. ஆனால் சம்பந்தப்பட்ட நிறுவனத்திடமிருந்து குறைகளை நிவர்த்தி செய்திட எந்த ஒரு பதிலும் பெறப்படவில்லை. ஆகையால் வழங்கப்பட்ட அனுமதியினை ரத்து செய்யவும், மேலும் உள்ளூரில் பல தொண்டு பணிகளை பார்த்து வரும் ஜீவஅனுக்கிரஹ நிறுவனத்திற்கு கீழ்வரும் நிபந்தனைகளுடன் பராமரிப்பு பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>நிபந்தனைகள்</u>

1.கோவில்பட்டி நகராட்சி எரிவாயு கூடத்தை தினசரி சுத்தமாக வைப்பட வேண்டும்.

2.கோவில்பட்டி நகராட்சி நகர்மன்ற தீர்மானம் செய்த கட்டணம் ரூ.1800/–ஐ மட்டுமே பெறவேண்டும். தவிர கூடுதல் கட்டணம் வசூலிக்க கூடாது.

3. எரிவாயுதகனமேடை நடத்தி பணிபுரியும் பணியாளர்களுக்கு தாங்கள் தொண்டு நிறுவனத்தின் மூலம் ஊதியம் வழங்க வேண்டும்.

4. தகனமேடை கூடத்தை சுற்றி உள்ள நிழல் தரும் மரங்களை தினசரி பராமரித்து தர வேண்டும்.

5. இறப்பு பதிவுகளை 15 நாட்களுக்கு ஒருமுறை நகராட்சி அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

6. எரிவாயு மயனாம் காலை 7.00 மணி முதல் மாலை 7.00 மணிவரை இயங்க வேண்டும்.

7. பொதுமக்களக்கு பயன்பெறும் வகையில் புகார் பதிவு செய்ய வசதி செய்யப்பட வேண்டும்.

8. அஸ்தியினை 24மணிநேரம் கழித்து (அடுத்த நாள் காலை 9.00 மணிக்குள்) வழங்கிவிட வேண்டும்.

9. மன்றத்தில் அனுமதி பெற்ற நாளிலிருந்து 3 ஆண்டுகளுக்கு இந்த பராமரிப்பு பணி தங்கள் நிறுவனததிற்கு வழங்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் தங்கள் பராமரிப்பு பணியின் தரம் பொறுத்து புதுப்பித்து அனுமதி வழங்கப்படும்.

10. தகனமேடையில் எரியூட்டப்படும் பூதவுடல் ஒன்றிற்கு ரூ.100/– வீதம் நகராட்சிக்கு செலுத்தி ரசீது பெறப்பட வேண்டும்.

11. எரிவாயு மயான பராமரிப்பில் பெரிய அளவிலான மராமத்துப் பணிகளை நகராட்சி பொறியியல் பிரிவு மூலம் மேற்கொள்ளப்படும். தகனமேடையை பெற்றுக்கொண்ட நிலையிலேயே திரும்ப ஒப்படைக்க வேண்டும். உரிய அனுமதி போதுமின்றி கட்டிட அமைப்பில் பெரிய மாற்றங்கள் ஏதும் செய்தல் கூடாது.

12. மேலே உள்ள நிபந்தனைகள் மீறப்பட்டால் எந்த நேரத்திலும் உத்தரவு ரத்து செய்யப்படும்.

13. வளாகத்தில் சுற்றியுள்ள செடிகளை முறையாக பராமரிக்கவும்

| | | |
|---|---|---|
| | சேகரமாகும் குப்பைகளை முறையாக சேகரித்து நகராட்சி வசம் ஒப்படைத்தும் தூய்மையாக பேணப்பட வேண்டும்.<br>14.ரூ.20/—மதிப்பிலான ஒப்பந்த பத்திரம் தயார் செய்து நகராட்சிக்கு அளிக்க வேண்டும்.<br>அ.கு:- மன்றம் அனுமதி வழங்கலாம். | |
| | **பொருள் எண்: 6**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.28, வெங்கடேஷ்நகர் 2வதுதெரு மற்றும் கதிரேசன்கோவில் தெருவில் வடிகால் அமைக்கும் பணி ரூ.3,25,000/—க்கு மேற்கொள்ள 27.07.2012 அன்று வேலைஉத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி பணிக்கு 16.14% குறைவான விலை விகிதம் கொடுத்துள்ளதால் அன்னார் கூடுதலாக 5% சதவிகித தொகை ரூ.16,250/—யை செலுத்திய பின்னர் வேலை உத்திரவு வழங்கப்பட்டது.<br>தற்பொழுது நாளது தேதிவரை மேற்படி பணி துவங்கப்படாத நிலையில் உள்ளது. மேலும் மேற்படி ஒப்பந்தக்காரர் பணி உத்திரவு பெற்று ஐந்து வருடங்களுக்கு மேலாகி விட்டதாலும் தளவாட பொருட்களின் விலை விகிதம் கூடுதலாகி விட்டதாலும் பணியினை மேற்கொள்ள இயலவில்லை எனவும் பணிக்கான கூடுதல் வைப்புத் தொகை ரூ.16,250/— செலுத்தியதை திரும்ப வழங்குமாறும் விண்ணப்பித்துள்ளார்.<br>எனவே தற்போது நகராட்சி நிதிநிலையை கருத்தில் கொண்டு பணி உத்திரவினை ரத்து செய்யவும் ஒப்பந்தக்காரர் செலுத்தியுள்ள வைப்புத்தொகை ரூ.3250/— மற்றும் கூடுதல் வைப்புத்தொகை ரூ.16,250/—யை திரும்ப வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அ.கு:- மன்றம் அனுமதிக்கலாம். | **2839.** அங்கீகரிக்கப்படுகிறது. |
| | **பொருள் எண்: 7**<br>இந்நகராட்சி பொறியியல் பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் வாகன எண்.TN 69Z5369 ற்கு தகுதி சான்று பெறும் பொருட்டு மேற்படி வாகனத்திற்கு பழுது பணி மேற்கொள்ளவும் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள Ashok Leyland கோவில்பட்டி என்ற நிறுவனத்திற்கு வழங்கவும் அதற்கான உத்தேச மதிப்பீடு தொகை ரூ.90,000/—க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அ.கு: வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | **2840.** அங்கீகரிக்கப்படுகிறது. |
| | **பொருள் எண்: 8**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட அறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தில் சுற்றுச்சுவர் கட்டுவது தொடர்பாக வழக்கு எண்.14129 of 2017ல் தொடரப்பட்ட வழக்கிற்கு திரு.என்.திலிப்குமார், வழக்கறிஞர் மதுரை அவர்களுக்கு வழக்குக் கட்டணத் தொகை ரூ.9000/— வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | **2841.** அங்கீகரிக்கப்படுகிறது. |
| | **பொருள் எண்: 9**<br>கோவில்பட்டி நகராட்சி எதிராக துப்புரவு பணியாளர் கருப்பாசமி / சொக்கன் என்பவர் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை வழக்கு எண். W.P.No.13625 of 2017 வழக்கு | **2842.** அங்கீகரிக்கப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| | தொடரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கிற்கு நகராட்சியின் சார்பாக திரு.பி. ஸ்ரீனிவாஸ் வழக்கறிஞர் (சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்) ஆஜர் ஆவதற்கும் அதற்கான செலவினத் தொகை ரூ.15,000/– வழங்க மன்றம் அனுமதிக்க வேண்டப்படுகிறதுது<br>அ.கு:- மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.3917/2017/எச்1) | |
| | **பொருள் எண்: 10**<br>இந்நகராட்சி பொறியியல் பிரிவில் பராமரிக்கப்படும் குடிநீர் வாகனம் எண். TN 69Z5369 டயர் தேய்ந்த நிலையில் உள்ளதால் மேற்படி வாகனத்திற்கு புதிய டயர்கள் 6 எண்ணம் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திற்கும் அதற்கான உத்தேச மதிப்பீடு செலவினத் தொகை ரூ.82,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அ.கு:- மன்றம் அனுமதிக்கலாம். | **2843.** அங்கீகரிக்கப்படுகிறது. |
| | **பொருள் எண்: 11**<br>இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள வாகனம் TN 69 AV 5248 (SCORPIO) ல்<br>1. ஆயில் சர்வீஸ் யுடிசல்பில்டர் ஆயில் பில்டர் புதியது மாற்றவும்<br>2. ஏர்பில்டர் புதியது மாற்றவும்<br>3. அலாய்ண்மென்ட் செக்கப் & வீல்பேலன்ஸ்<br>4. வாட்டர் சர்வீஸ்<br>5. பவர் விண்டோ செக்கப் செய்ய வேண்டியுள்ளது<br>மேலும் 80000 கி.மீட்டருக்கு மேல் இயங்கியுள்ளதால் மேற்படி வாகனத்திற்கு மேற்கண்ட பழுதுப் பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.15000/–க்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அ.கு:-<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. வாகனத்திற்கான பழுது பணிகளை அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான கொடை கார்ஸ் (பி) லிட்., திருநெல்வேலி மூலம் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 7170/17/இ1) | **2844.** அங்கீகரிக்கப்படுகிறது. |
| | **பொருள் எண்: 12**<br>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.12, பங்களாதெரு நகராட்சி பள்ளியில் கல்வி நிதியின் கீழ் கூடுதல் வகுப்பறை கட்டிடம் கட்டுவதற்கு மண்டல செயற்பொறியாளர் அவர்களின் அறிவுரையின்படி structural design அதாவது கட்டமைப்பு வடிவமைப்பு பெறுவதற்கு விலைப்புள்ளி பெற்றதில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள Pavithraa associates, Chennai அவர்களின் மூலம் பெறுவதற்கும், அதற்கான உத்தேச செலவீனம் ரூ.12000/–க்கும் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வேண்டப்படுகிறது.<br>அ.கு:- மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண். 6064/2017/இ1) | **2845.** அங்கீகரிக்கப்படுகிறது. |

**பொருள் எண்: 13**

கோவில்பட்டி நகராட்சியில் கல்விநிதியின் கீழ் வார்டு–12, பங்களாத்தெரு நகராட்சி பள்ளியில் கூடுதல் வகுப்பறைக் கட்டிடம் மற்றும் சுற்றுச்சுவர் கட்டும் பணிக்கு மன்ற எண்.2787, 28.09.2017ன் படி நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது. மேற்படி பணிக்கு 17.11.2017 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்.

1.M/S. Raj Engineering Construction
Theni .. 0.01% குறைவு

2. M/S. C. Nallakurumban & Co
Theni .. 2.39 % அதிகம்

வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.01% குறைவாக வழங்கியுள்ள M/S. Raj Engineering constructions, Theni அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டடப்படுகிறது.

அ.கு:- மன்றம் அனுமதி வழங்கலாம்.

**2846.** அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்: 14**

நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களின் ந.க.எண்.15981/2016/எச்1 நாள் 19.4.2017ம் தேதிய கடிதத்தில் தமிழ் நாட்டில் உள்ள அனைத்து நகராட்சிகளிலும் அதன் தரத்திற்கு ஏற்றவாறு நகராட்சி பொதுப் பணி பிரிவில் விதிகளின்படியும், நிலைகளின்படியும் நகராட்சி மேலாளர், வருவாய் அலுவலர், உதவி வருவாய் அலுவலர், மற்றும் கணக்கர் ஆகிய பணியிடங்களை தோற்றுவித்தல் மற்றும் நகராட்சிகளின் நிலைகளுக்கு ஏற்றவாறு பணியிடங்களின் நிலை உயர்த்த தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி

1) இந்நகராட்சி அரசாணை எண் 238 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள் 2.12.2008ன்படி தேர்வு நிலையிலிருந்து சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது

| வ. எண் | தற்போதுள்ள பணியிட விவரம் | வகுப்பு | நகராட்சியின் தரம் உயர்த்தப்பட்டால் தரம் உயர்த்தப்பட வேண்டிய பணியிட விவரம் | வகுப்பு |
|---|---|---|---|---|
| 1 | மேலாளர் | II | மேலாளர் | 1A |
| 2 | வருவாய் அலுவலர் | IV | வருவாய் அலுவலர் | II |
| 3 | கணக்கர் | IV | கணக்கர் | II |
| 4 | உதவி வருவாய் அலுவலர் | - | உதவி வருவாய் அலுவலர் | IV |

**2847.** அங்கீகரிக்கப்படுகிறது.

**3) ஊதிய விவரம்**

| வ. எண் | பணியிட விவரம் | தற்போது பெற்று வரும் ஊதிய விகிதம் | நிலை உயர்த்தப்பட்டால் வழங்கப்பட வேண்டிய ஊதிய விகிதம் |
|---|---|---|---|
| 1 | மேலாளர் | 9300-34800+4300 | 9300-34800+4800 |
| 2 | வருவாய் அலுவலர் | 9300-34800+4200 | 9300-34800+4300 |
| 3 | கணக்கர் | 9300-34800+4200 | 9300-34800+4300 |
| 4 | உதவி வருவாய் அலுவலர் | - | 9300-34800+4200 |

மேலும் இந்நகராட்சி பெரு நகராட்சியாக இருப்பதாலும் ஒவ்வொரு ஆண்டும் நகராட்சியின் வருவாய் அதிகரித்துக் கொண்டு வருவதாலும் இந்நகராட்சிக்கு உதவி வருவாய் அலுவலர் பணியிடம் அவசியம் தேவைப்படுகிறது. எனவே இந்நகராட்சிக்கு மேலாளர் பணியிடம் வகுப்பு–IA–லும் வருவாய் அலுவலர் மற்றும் கணக்கர் பணியிடம்–II தரம் உயர்த்தி, புதியதாக உதவி வருவாய் அலுவலர் பணியிடம் வகுப்பு IV லும் தோற்றுவிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்: 15**

**2848.** அங்கீகரிக்கப்படுகிறது.

இந்நகராட்சிக்குட்பட்ட ஸ்டாலின் காலனி பகுதியில் அமைந்துள்ள சிறுமின் விசை பம்புடன் கூடிய மோட்டார் அறைக்கு ஒருமுனை மின்இணைப்பை மும்முனை இணைப்பாக மாற்றியமைக்க உத்தேச செலவினம் ரூ.12000/–ம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேலும் மேற்படி ஒருமுனை கம்பரசர் மின்மோட்டார் மற்றும் ஸ்டாட்டர் சுழற்றி அலுவலக இருப்பில் உள்ள மும்முனை கம்பரசர் மோட்டார் மற்றும் ஸ்டாட்டரை பொருத்தி இயக்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண். 6910/2017/இ1)**

**பொருள் எண்: 16**

**2849.** அங்கீகரிக்கப்படுகிறது.

இந்நகராட்சிக்குட்பட்ட கூடுதல் பேருந்து நிலையத்தில் பின்புறம் இருசக்கர வாகன காப்பகம் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் இதுநாள் வரையில் குத்தகைக்கு எடுக்க யாரும் முன்வரவில்லை. மேலும் இருசக்கர வாகன காப்பகத்தை பயன்பாட்டிற்கு கொண்டு வரும் பொருட்டு ஏற்கனவே அமைந்துள்ள கூரையை பிரித்தும் போக்குவரத்திற்கு இடையூறின்றி மேற்கு பகுதியில் பேருந்து நிலையத்தின் எல்லையை ஒட்டியுள்ள

| | | |
|---|---|---|
| | காலியிடத்தில் (முகப்பு பகுதியில்) இருசக்கர வாகனம் அமைக்கவும் அதற்கான உத்தேச மதிப்பீடு தொகை ரூ.1,70,000/–ம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம். | |
| | **பொருள் எண்: 17**<br>இந்நகராட்சிக்கு சொந்தமான பங்களாதெரு பள்ளியில் குழந்தைகளின் பயன்பாட்டில் இருக்கும் 50 LPH அளவிலான நீர் சுத்திகரிப்பு இயந்திரம் பழுது நீக்கம் செய்ய விலைப்புள்ளி பெறப்பட்டதில்<br>1. Global Technology .. Rs.10350/-<br>2. Aqua Tech, Kovilpatti .. Rs.11000/-<br>3. Aqua State, Kovilpatti .. Rs.10800/-<br>இம்மூன்று விலைப்புள்ளி வரப்பட்டுள்ளது.<br>இதில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள குளோபல் டெக்னாலஜி, கோவில்பட்டி அவர்கள் மூலமாக பணி மேற்கொள்ள, பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு– கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.3043/2017/இ1) | **2850.** அங்கீகரிக்கப்படுகிறது. |
| | **பொருள் எண்: 18**<br>இந்நகராட்சி ஒப்பந்தக்காரர்கள் 2016–17ம் ஆண்டு பணி மேற்கொண்டதற்கு பிடித்தம் செய்து வைக்கப்பட்டுள்ள வருமானவரி தொகையினை ரிட்டர் மென்பொருளில் பதிவு செய்த வகைக்கு திரு.A. சரவணன் அவர்கள் கொடுத்துள்ள பில் தொகை ரூ.3400/– னை அன்னார்க்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 5418/2015/இ1) | **2851.** அங்கீகரிக்கப்படுகிறது. |
| | **பொருள் எண்: 19**<br>கோவில்பட்டி நகராட்சி கூடுதல் பேருந்து நிலையத்தில் பஸ்நுழைவுக் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 28.11.2017ம் தேதியில் குறுகியகால ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. மேற்காணும் குறுகியகால மறுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றதில், கீழ்க்காணும் விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்று தனித்தனியாக வைப்புத்தொகை செலுத்தப்பட்டுள்ளது. | **2852.** அங்கீகரிக்கப்படுகிறது. |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>வ. எண்</td><td>குத்தகைதாரர் பெயர் மற்றும் முகவரி</td><td>ஓராண்டு குத்தகை உரிமம் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை (ரூ)</td></tr>
<tr><td>1</td><td>திரு. வி. சந்திரசேகர்,<br>2/84, நடுத்தெரு,<br>பிள்ளையார்நத்தம்.<br>கோவில்பட்டி.</td><td>7,09,000/–<br>(ஒப்பந்தப்புள்ளி )</td></tr>
<tr><td>2</td><td>திரு. பி.முத்துப்பாண்டி,<br>457, E.B. காலனி,<br>சாஸ்திரி நகர்,<br>கோவில்பட்டி.</td><td>7,02,000/–<br>(ஒப்பந்தப்புள்ளி)</td></tr>
</table>
மேற்காணும் விபரப்படி இரண்டு நபர்களில் ஓராண்டு குத்தகை உரிமம் உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.7,09,000/ற்கு திரு.வி.சந்திரசேகர், என்பவர் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். எனவே உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.7,09,000/– கோரிய திரு.வி.சந்திரசேகர், என்பவருக்கு கூடுதல் பேருந்து நிலையத்தில் பஸ் நுழைவுக் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் 15.12.2017 முதல் 14.12.2020 வரை ஒவ்வொரு மூன்றாண்டு காலத்திற்கு குத்தகை இன பொது ஏலம் நிபந்தனைகளின் படி, நடத்தி கொள்ளும் உரிமம் ஒப்படைப்பு செய்வதற்கு மன்றம் அங்கீகாரத்திற்காக.<br>
<u>அலுவலக குறிப்பு</u>:- மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>
ந.க.எண். 9856/2014/அ3
</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td><u>பொருள் எண்.20</u><br><br>
கோவில்பட்டி நகராட்சிக்கு சொந்தமான அண்ணா பேருந்து நிலையம் மேற்கு பகுதியில் உள்ள கட்டண கழிப்பறை உபயோகிக்க கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 28.11.2017ம் தேதியில் குறுகிய கால மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. மேற்காணும் குறுகிய கால மறுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றதில், மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி எவரும் கோர முன் வரவில்லை. திரு.ந.இளங்கோவன், என்பவர் 10.11.2017ம் தேதியில் கோரிய ஒப்பந்தப்புள்ளி ஓராண்டு குத்தகை உரிமம் தொகை ரூ.7,01,000/–மேற்கண்ட குத்தகை இனத்திற்கு உயர்ந்தபட்சமாக கோரியுள்ளார். எனவே திரு.ந.இளங்கோவன் என்பவர் கோரிய ஓராண்டு குத்தகைக்கு தொகை 7,01,000/–ற்கு 01.12.2017 முதல் 30.11.2020 வரை குத்தகை உரிமம் வழங்க மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.<br>
ந.க.எண்.9856/2014/அ3</td>
<td>2853.<br>பலமுறை ஏலம் கோரப்பட்டும் யாரும் ஏலம் கோர முன்வராததினால் திரு.ஐ.இளங்கோவன் கோரியுள்ள ஒப்பந்தப்புள்ளி தொகையினை அங்கீகரிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td><u>பொருள் எண்.21</u><br>கோவில்பட்டி நகராட்சிக்கு சொந்தமான அண்ணா பேருந்து நிலையம் மேற்கு பகுதி கடை எண்.1ற்கு 28.11.2017ம் தேதியில் குறுகிய கால மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. மேற்காணும் குறுகிய கால மறுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றதில், மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி எவரும் கோர முன் வரவில்லை. திரு.பா.வேல்ச்சாமி என்பவர் 10.11.2017ம் தேதியில் நடைபெற்ற பொதுஏலத்தில் ஒரே ஒரு உயர்ந்தபட்ச மாதவாடகையாக ரூ.11,300/– கோரியுள்ளார். எனவே திரு.பா. வேல்ச்சாமி என்பவர் கோரிய உயர்ந்தபட்ச மாதவாடகை ரூ.11,300/–ற்கு 01.12.2017 முதல் 30.11.2020 வரை குத்தகை உரிமம் வழங்க மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.<br>ந.க.எண்.7280/2015/அ3</td>
<td>2854.<br>மறுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி பலமுறை கோரப்பட்டு எவரும் கோரப்படாததினால் திரு.பா.வேல்ச்சாமி அவர்களின் ஏலக்கேள்வியினை அங்கீகரிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td></td>
<td><u>பொருள் எண்.22</u><br>இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு TN69R8104 டம்பர் பிளேசர் வாகனத்தில் முன்பக்க இரண்டு வீல் ஜாமாகி உள்ளது. மேலும் பின்புறம் வீல் கீரிஸ், வலது பக்கம் கதவு கண்ணாடி ஏற்றும் மிசின் பழுதடைந்து இருப்பதால் பழுதுகளை நீக்கம் செய்ய உத்தேச செலவினத் தொகை ரூ.10,000/– மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:-<br>உத்தேச செலவினத் தொகையினை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>ந.க.எண்.4169/2017/எச்1</td>
<td>2855.<br>அங்கீகரிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td></td>
<td><u>பொருள் எண்.23</u><br>இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு TN69R8104 டம்பர் பிளேசர் வாகனத்தில் முன்பக்க இரண்டு வீல் ஜாமாகி உள்ளது. மேலும் பின்புறம் வீல் ஜாமாகி உள்ளது. மேலும் பின்புறம் வீல் கீரிஸ், வலது பக்கம் கதவு கண்ணாடி ஏற்றும் மிசின் பழுதடைந்து இருப்பதால் பழுதுகளை நீக்கம் செய்ய கீழ்க்கண்ட அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பட்டுள்ளது.
<table>
<tr><td>1.</td><td>K.S.K. ASHOK LEYLAND<br>திருநெல்வேலி தேசிய நெடுஞ்சாலை<br>கோவில்பட்டி.</td><td>ரூ. 6276.20/–</td></tr>
</table>
அலுவலக குறிப்பு:-<br>அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான K.S.K. ASHOK LEYLAND கோவில்பட்டி நிறுவனத்தாரின் பட்டியலுக்கு தொகை வழங்க அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.4169/2017/எச்1</td>
<td>2856.<br>அங்கீகரிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

**பொருள் எண்.24**

இளநிலை பொறியாளர்கள் வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு பிரிவிற்குட்பட்ட நகராட்சி பகுதியில் மின்கட்டமைப்பு மேம்படுத்தும் விதமாக RAPDRP என்ற திட்டத்தின் கீழ் புதிதாக மின்மாற்றிகள் நிறுவப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தில் நிறுவப்பட்ட அனைத்து மின்மாற்றிகளும், ஏற்கனவே இயக்கத்தில் உள்ள மின்மாற்றிகளின் பளுவை குறைக்கும் விதமாகவும் மின்விநியோகத்தை சீராக வழங்கும் விதமாகவும் அமைக்கப்பட்டுள்ளன. நகராட்சி தெருவிளக்கு மின்இணைப்பிற்காக இடிக்கப்பட்ட மின்கம்பிகள் புதிதாக அமைக்கப்பட்ட மன்மாற்றிகளின் குறுக்கே பாதுகாப்பில்லாமல் செல்வதால் ஒவ்வொரு மின்மாற்றிக்கும் தனித்தனியாக தெருவிளக்கு மின்இணைப்பு கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என தெரிவித்துள்ளனர். எனவே நான்கு பிரிவு மின்வாரிய அலுவலகங்களுக்கும் புதிதாக அமைக்கப்பட்ட மின்மாற்றிகளின் மின்இணைப்புகளுக்கான கேட்புத் தொகை கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

| | புதியதெரு விளக்கு எண்ணிக்கை | 1 No க்கான தொகை | தொகை |
|---|---|---|---|
| வடக்குப் பகுதி | 27 x | 1600 = | 43200 |
| தெற்குப் பகுதி | 12 x | 1600 = | 19200 |
| கிழக்குப் பகுதி | 40 x | 1600 = | 64000 |
| மேற்குப் பகுதி | 17 x | 1500 = | 25500 |

மேற்படி தொகையினை மின்வாரியத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**2857.**

அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்.25**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.21–ல் பகத்சிங்தெருவில் ஏற்கனவே ஆழ்துளை கிணறுடன் கூடிய சிறுமின்விசை பம்பு மற்றும் மோட்டார் அறை அமைந்துள்ளது. மேற்படி மோட்டார் அறையுடன் தண்ணீர் தொட்டி அமைந்துள்ளதில் தண்ணீர் கசிந்து வருவதால் நீரேற்றம் செய்ய இயலவில்லை. எனவே அப்பகுதி மக்களின்தண்ணீர் அத்தியாவசியம் கருதி புதிதாக சின்டெக்ஸ் தொட்டி பொருத்தி அதற்கான பைப்லயன் அமைக்கவும் உத்தேச மதிப்பீடு ரூ.50000/–க்கு தயாரிக்கப்பட்டுள்ளது மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.

**2858.**

அங்கீகரிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| | **<u>பொருள் எண்.26</u>**<br><br>வார்டு எண்.29ல் ராமையாநகர் பகுதியில் ஏற்கனவே சிறுமின்விசை பம்புடன் கூடிய ஆழ்துளை கிணற்றில் 3HP நீர்மூழ்கி மோட்டார் பொருத்தி 3 ஆண்டுகள் ஆகிவிட்டதால் தற்போது மேற்படி நீர்மூழ்கி மோட்டாரானது முற்றிலும் பழுதடைந்து இயக்க முடியாத நிலையில் உள்ளதால் ஆழ்துளை கிணற்றில் உள்ள நீர்மூழ்கி மோட்டார் மற்றும் கேபிள், ஹோஸ் அனைத்தும் சுழற்றப்பட்டு அலுவலக இருப்பில் வைக்கப்பட்டுள்ளது. எனவே அப்பகுதி மக்களின் தண்ணீர் அவசியம் கருதி ஏற்கனவே அலுவலக இருப்பில் உள்ள 3 Phase கம்ப்ரசர் மோட்டார் மற்றும் 25mm HPPE ஹோஸ் பைப் தேவையான அளவு எடுத்து பொருத்தவும் மற்றும் மோட்டார் பொருத்துவதற்கு Bed அமைக்கவும் உத்தேச செலவினத் தொகை ரூ.25000/–ம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு–<br>குடிநீர் வழங்கல் நிதியில், மேற்கூறிய செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | **2859.**<br>அங்கீகரிக்கப்பட்டது. |
| | **<u>பொருள் எண்.27</u>**<br><br>இந்நகராட்சியில் பொறியியல் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வந்த வாகனம் எண்.TN69V0913 யானது 19.04.2004ல் வாங்கி 13 வருடங்கள் ஆகிவிட்டதாலும் 365000 கி.மீ. தூரம் ஓடியதாலும் மேற்படி வாகனத்தின் பராமரிப்பு செலவுகள் கூடுதலாகிறது. மேலும் இதனுடைய உதிரி பாகங்கள் கிடைக்காத நிலையிலும் உள்ளதால் வாகனத்தை தொடர்ந்து பயன்படுத்த இயலாதநிலை உள்ளது. இப்பழைய வாகனத்தை ஏலம் விடுவதற்கும், புதிய வாகனம் DGS & D தரவிலைப் பட்டியல்படி BOLERO TOP MODAL வாகனம் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடம் வாங்குவதற்கும் அதற்கா உத்தேச செலவினம் ரூ.9.00 லட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>மேற்கூறிய வாகனம் கொள்முதல் குறித்து மேலும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் வாயிலாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் நிர்வாக அனுமதி வேண்டி உரிய கருத்துரு அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.<br>அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம். | **2860.**<br>அங்கீகரிக்கப்பட்டது. |
| | **<u>பொருள் எண்.28</u>**<br><br>இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு TN69AS2778 வாகனத்தில் டீசல் பில்டர் புதியது, பிரேக், கிளச் செக்கப் மற்றும் கம்ளீட் வாட்டர் சர்வீஸ் செய்து கிரீஸ், இஞ்ஜின் ஆயில் லீக் ஆகியவை பழுதடைந்து இருப்பதால் பழுதுகளை நீக்கம் செய்ய உத்தேச செலவினத் தொகை ரூ.18,000/– மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு–உத்தேச செலவினத் தொகையினை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>ந.க.எண்.6843/2017/எச்2 | **2861.**<br>அங்கீகரிக்கப்பட்டது. |

**<u>பொருள் எண்.29</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்க்கண்டவாறு உள்ள 10 இடங்களில் உள்ள மின்இணைப்பு பெட்டிகள் மிகவும் பழுதடைந்தும் மழை காலங்களில் பாதுகாப்பான நிலையில் உள்ளது.

1. திலகர் நகா – வார்டு–1
2. நெல்லை மெயின்ரோடு, (ராமசாமிதாஸ் பூங்கா எதிரில்)
3. வேலாயுதபுரம் 5வதுதெரு
4. வக்கீல்தெரு
5. பசுவந்தனைரோடு கிழக்கு 6வதுதெரு
6. ஓதுவார் முடுக்குதெரு எண்.20
7. தெப்பக்குளம்தெரு
8. திருமங்கைநகர் – வார்டு–30
9. பைபாஸ்ரோடு தெற்கு
10. பைபாஸ்ரோடு வடக்கு

மேற்கண்ட இடங்களுக்கு மின்இணைப்பு பெட்டிகள் 10 எண்ணம் வாங்கி பொருத்தவும், அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.60000/–க்கு தயாரிக்கப்பட்டுள்ளதினை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.

**2862.**
அங்கீகரிக்கப்பட்டது.

**<u>பொருள் எண். 30</u>**

இந்நகராட்சி கணினி பிரிவிலுள்ள சர்வர்–1, கணினிகள்–30, பிரிண்டர்கள்–2, (Dot matrix) ஆகியவற்றிற்கு 2017–18ம் ஆண்டிற்கான வருடாந்திர பராமரிப்பு மேற்கொள்வதற்கு உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் பின்வருமாறு:-

| | | |
|---|---|---|
| 1 | SAI Computers Kovilpatti | Rs. 149152/- |
| 2 | Thomson Electronics & Computers, Kovilpatti | Rs. 158710/- |
| 3 | Sojourner Computers, Kovilpatti | Rs. 136880/- |

குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள Sojourner Computers, Kovilpatti அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்க மற்றும் பணி முடிந்த பின்பு ரூ.136880/– செலவு தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) Sojourner Computers, Kovilpatti அவர்களின் மூலம் பணியினை மேற்கொள்வதற்கு உத்திரவு வழங்கலாம்.
(ந.க.எண். 5444/2016/இ1)

**2863.**
அங்கீகரிக்கப்பட்டது.

**<u>பொருள் எண். 31</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட ஸ்டாலின் காலனி பகுதியில் உள்ள நகராட்சி பள்ளி கட்டிடத்திற்கு கழிப்பிட வசதி மற்றும் கூடுதல் வகுப்பறை கட்டுவதற்கு மதிப்பீடு ரூ.15.00 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு திரு.கே. ஆனந்தராஜ்,

**2864.**
அங்கீகரிக்கப்பட்டது.

<table>
<tr>
<td></td>
<td>ஒப்பந்தகாரருக்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டது. ஆனால் பணியை துவங்கும்பொழுது அப்பகுதி மக்கள் ஆட்சேபணை தெரிவித்ததால் மேற்படி கட்டுமானப் பணியை துவங்க இயலவில்லை. இந்நிலையில் மேற்படி பணிக்கு வேலை உத்திரவு வழங்கி 3 ஆண்டுகள் ஆகிவிட்டதால் மேற்படி பணி உத்திரவினை ரத்து செய்யவும், அப்பணிக்காக ஒப்பந்தகாரர் செலுத்தியுள்ள வைப்புத் தொகையை திரும்ப வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு–<br>1. பணி உத்திரவினை ரத்து செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அப்பணிக்காக செலுத்திய முன்வைப்புத் தொகையினை திரும்ப வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td><u>பொருள் எண். 32</u><br>இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள சிறுமின்விசை பம்புகளுக்கான மோட்டார் அறைகள், நகராட்சி அலுவலகம், பேருந்து நிலையம், பூங்காக்கள் மற்றும் நகராட்சி உரக்கிடங்கு ஆகிய கட்டிடங்களில் உள்ள விளக்குகளை பராமரிக்க தேவையான உதிரி சாமான்கள் இருப்பில் மிகவும் குறைவாக உள்ளது. எனவே மேற்படி கட்டிடங்களில் உள்ள விளக்குகளை பராமரி.க் தேவையான சாமான்கள் வாங்குவதற்கு உத்தேச மதிப்பீடு ரூ. 60000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>2865.<br>அங்கீகரிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td></td>
<td><u>பொருள் எண். 33</u><br>திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016–ன் படி நகராட்சி பகுதிகளில் ஈரக்குப்பைகள் மற்றும் உலர்ந்த குப்பைகள் வீடு வீடாகச் சேகரிக்கப்பட்டு வருகிறது. மேலும் அந்த அந்த வார்டுகளில் சேகரிக்கப்படும் ஈரக்குப்பைகளை அப்பகுதியிலேயே உரமாக்கி பயன்படுத்தி கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே புதுக்கிராமம், சுப்ரமணியபுரம், மந்திதோப்பு ரோடு, ஸ்ரீராம்நகர், ஸ்டேட் பாங்க் காலனி ஆகிய பகுதிகளில் குப்பைகளை குழிகளில் கொட்டி உரம் தயாரிப்பதற்காக Micro Compost Centre ஏற்படுத்துவதற்காக மேற்கண்ட ஒவ்வொரு இடத்திலும் 15x5x5 நீள, அகல, ஆழமுள்ள தலா இரண்டு குழிகள் தோண்டுவதற்கும், மக்காத குப்பைகளை சிதம்பராபுரம் கலவை உரக்கிடங்கில் கொட்டும் இடத்தில் குவிந்துள்ள குப்பைகளை ஒதுக்குவதற்கும் JCB இயந்திரம் மூலம் பணி செய்வதற்கு இந்நகர்மன்றம் 31.10.2017–ம் தேதிய தீர்மான எண்.2803–ல் அனுமதி அளித்துள்ளதன் பேரில் விலைப்புள்ளி கோரிரிதில் கீழ்கண்ட விலைப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.
<table>
<tr><td>1.</td><td>ஸ்ரீ வன்னிவிநாயகர் எர்த் மூவர்ஸ்<br>பெத்துரெட்டிபட்டி</td><td>ரூ.800/–</td></tr>
<tr><td>2.</td><td>ஸ்ரீ நாராயணசாமி லாரி சர்வீஸ்,<br>ஓ. மேட்டுப்பட்டி</td><td>ரூ. 850/–</td></tr>
</table>
</td>
<td>2866.<br>அங்கீகரிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | | 1. ஸ்ரீ வன்னிவிநாயகர் எர்த் மூவர்ஸ் பெத்துரெட்டிபட்டி ரூ.800/– |
| | | 2. ஸ்ரீ நாராயணசாமி லாரி சர்வீஸ், ஓ. மேட்டுப்பட்டி ரூ. 850/– |
| | | 3. ஸ்ரீ பாலாஜி எர்த் மூவர்ஸ் 4/81சி, மேலக்காலனி, கோவில்பட்டி. ரூ.900/– |

| | | |
|---|---|---|
| | <table><tr><td>1.</td><td>ஸ்ரீ வன்னிவிநாயகர் எர்த் மூவர்ஸ்<br>பெத்துரெட்டிபட்டி</td><td>ரூ.800/–</td></tr><tr><td>2.</td><td>ஸ்ரீ நாராயணசாமி லாரி சர்வீஸ்,<br>ஓ. மேட்டுப்பட்டி</td><td>ரூ. 850/–</td></tr><tr><td>3.</td><td>ஸ்ரீ பாலாஜி எர்த் மூவர்ஸ்<br>4/81சி, மேலக்காலனி,<br>கோவில்பட்டி.</td><td>ரூ.900/–</td></tr></table><br>அலுவலக குறிப்பு–<br>குறைவான விலைப்புள்ளி அளித்த பெத்துரெட்டிபட்டி, ஸ்ரீ வன்னிவிநாயகர் எர்த் மூவர்ஸ் நிறுவனத்தாரின் விலைப்புள்ளியினை ஏற்று மேற்கண்ட பணியினை செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 6342/2017/எச்1 | |
| | **<u>பொருள் எண். 34</u>**<br>வார்டு எண்.26ல் கதிரேசன்கோவில் முதல் தெருவில் சிறுபாலம் பழுதடைந்துள்ளது மற்றும் கதிரேசன்கோவில் மேற்குப் பகுதி வடிகால் வசதி இல்லாமல் உள்ளது. எனவே மேற்படி இடங்களில் சிறுபாலம் புதுப்பித்து கட்டவும் வடிகால் கட்டவும் உத்தேச மதிப்பீடு ரூ.60000/–க்கு தயாரிக்கப்பட்டுள்ளதினை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.5948/2017/இ1) | **2867.**<br>அங்கீகரிக்கப்பட்டது. |
| | **<u>பொருள் எண். 35</u>**<br>இந்நகராட்சிக்குட்பட்ட ஆனந்தா லாட்ஜ் அருகில் உள்ள கட்டணக் கழிப்பறை கட்டிடத்தில் உள்ள ஆழ்துளை கிணற்றில் நீர்மட்டம் மிகவும் ஆழத்தில் உள்ளது. எனவே நீரேற்றம் செய்ய இயலவில்லை. இதனால் கழிப்பறை சரிவர பயன்படுத்த இயலவில்லை. எனவே மேற்படி கழிப்பறைக்கு புதிதாக ஆழ்துளை கிணறு அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.1.50 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளதினை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம். | **2868.**<br>அங்கீகரிக்கப்பட்டது. |
| | **<u>பொருள் எண். 36</u>**<br>நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் ந.க.எண்.32050/2016/ஜே2 நாள்.26.10.2017 மற்றும் அரசாணை (நிலை) எண்.77 பள்ளிக்கல்வி (ப.க.4(1)த்துறை நாள்.13.04.2015, அரசாணை (நிலை) எண்.166 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.23.11.2016. கோவில்பட்டி நகராட்சி பகுதிகளில் அரசு பள்ளி 2 மற்றும் நகராட்சி பள்ளிகள் 6-ல் பயிலும் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 3975. இப்பள்ளிகளில் உள்ள கழிப்பறை சுத்தம் செய்வதற்கு துப்புரவு பணியாளர் 13 பேரும் மற்றும் துப்புரவு பணி மேற்பார்வையாளர் 1 நபரும் தேவைப்படுகின்றனர். மகளிர் சுய உதவிக்குழுக்கள் | **2869.**<br>அங்கீகரிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | அல்லது தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் ஒப்பந்தபுள்ளி பெறப்பட்டு தேர்வு செய்யவும். துப்புரவு பணிக்கு தேவையான உபகரணங்கள் வாங்குவதற்காகவும் ஒரு ஆண்டிற்காகும் உத்தேச செலவு தொகை ரூ.20,00,000/- (ரூபாய் இருபது லட்சம்) அதற்கான செலவு தொகையை கல்வி நிதியிலிருந்து வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.7370/2017/எச்1) | |
| | **பொருள் எண். 37**<br><br>இந்நகராட்சி பராமரிப்பில் ஸ்டாலின் காலனி பகுதியில் உள்ள நகராட்சி துவக்கப்பள்ளியில் பள்ளி குழந்தைகளுக்கான சிறுநீர் கழிப்பறை, தண்ணீர் வசதி மற்றும் குழந்தைகள் உட்கார்ந்து மதிய உணவு அருந்துவதற்கும் போதிய இடவசதி இல்லை. மேலும் வகுப்பறை வசதியும் குறைவாக உள்ளதால் குழந்தைகளுக்கு மிகவும் இடையூறாக உள்ளது என அப்பள்ளி தலைமை ஆசிரியர் கேட்டுக் கொண்டதன்படியும் பள்ளி குழந்தைகள் நலன் கருதி கூடுதல் வகுப்பறை, சிறுநீர் கழிப்பறை மற்றும் தண்ணீர் வசதி மற்றும் சமையலறை கட்டுவதற்கு உத்தேச மதிப்பீடு ரூ.16.50 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளதினை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு– கல்வி நிதியில் மேற்படி பணியை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 743/2017/இ1) | **2870.**<br>அங்கீகரிக்கப்பட்டது. |
| | **பொருள் எண். 38**<br><br>கோவில்பட்டி நகராட்சி பகுதிகளில் உள்ள தெருவிளக்குகளை தனியார் நிறுவனமான ஸ்ரீகங்கா எலக்ட்ரிக்கல்ஸ், திருநெல்வேலி நிறுவனத்தினர் மூலம் பராமரிப்பு பணி 2015–16 முதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கு முதன்மை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களிடம் ஒப்புதல் பெறப்பட்டும் அடுத்தடுத்த நிதியாண்டுகளுக்கு முறையே ஏற்கனவே 2015–16–ல் ஒப்புதல் பெறப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.29.05 லட்சத்திலிருந்து 5% கூடுதல் விலை விகிதத்திற்கு மேற்கொள்ளவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.<br><br>இந்நிலையில் கோவில்பட்டி நகர் பகுதிகளில் உள்ள 86 எண்ணம் 250 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள், 50 எண்ணம் 150 வாட்ஸ் மெட்டல் ஹலாய்டு விளக்குகள் மற்றும் 50 எண்ணம் 150 வாட்ஸ் சோடியம் ஆவிவிளக்குகள் T5-4x24 வாட்ஸ் CFL விளக்குகளாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி தெருவிளக்கு பராமரிப்பு பணி மேற்கொண்டு வரும் ஒப்பந்தக்காரருக்கு மாதந்தோறும் வழங்கப்பட்டுள்ள பட்டியலில் CFL விளக்குகள் மாற்றம் செய்யப்பட்டுள்ளதை விடுத்து (deduction) தொகை வழங்கப்பட்டுள்ளது. | **2871.**<br>அங்கீகரிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | அதன்படி 2015–16ஆம் ஆண்டிற்கான<br>மொத்த செலவினம் .. ரூ. 2696686/–<br>2016–17 ஆம் ஆண்டிற்கான<br>மொத்த செலவினம் .. ரூ. 2836706/–<br>தற்பொழுது மேற்படி CFL விளக்குகள் பொருத்தப்பட்டு பராமரிப்பு காலம் ஓராண்டு முடிவடைந்த நிலையில் மேற்படி CFL விளக்குகளை தெருவிளக்கு பராமரித்து வரும் ஸ்ரீகங்கா எலக்ட்ரிகல்ஸ், திருநெல்வேலி நிறுவனத்தினர் மூலம் பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் ஏற்கனவே தயார் செய்துள்ள மதிப்பீட்டில் மேற்படி CFL விளக்குகள் பராமரிக்கும் பணிக்கு வகை செய்யப்படவில்லை.<br>எனவே தற்பொழுது மேற்படி T5 4x24w CFL விளக்குகள் பராமரிப்பதற்கும் அதற்கான டேட்டா தயார் செய்துள்ளதை முதன்மை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களிடம் ஒப்புதல் பெற்று பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவினத் தொகை மதிப்பீடு தொகைக்குள்ளேயே மேற்கொள்ளவும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>மேலும் நகர் பகுதியில் முக்கிய சந்திப்புகளில் உயர் கோபுர விளக்குகள் 6 எண்ணம் அமைக்கப்பட்டு ஓராண்டு காலம் முடிவிடைந்துவிட்டது. எனவே அவ்விளக்குகளையும் பராமரிக்கவும் அதற்கான செலவினத்தையும் மேற்படி மதிப்பீடு தொகையிலேயே செலவினம் மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.<br>எனவே மேற்படி சோடியம் ஆவி விளக்குகளுக்கு பதிலாக CFL (T5-4x24w) விளக்குகள் மாற்றம் செய்துள்ளதை அக்டோபர் மாதம் முதல் பராமரிப்பு பணி செய்தமைக்கும் கூடுதலாக அமைக்கப்பட்ட 6 எண்ணம் உயர்கோபுர விளக்குகளையும் பராமரிக்கவும் ஒதுக்கீடு செய்துள்ள மதிப்பீடு தொகை ரூ.32.03 லட்சத்திற்குள் மேற்கொள்ளவும், கடந்த ஆண்டு 2016–17ல் மேற்படி CFL விளக்குகள் பராமரிப்பு பணி மேற்கொண்டதற்கும் அதற்கான செலவினத் தொகை மேற்கொண்டதற்கும் (டேட்டாவின்படி) பின்னேற்பு வழங்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்பவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | |
| | **<u>பொருள் எண். 39</u>**<br>இந்நகராட்சிக்குட்பட்ட சுப்பிரமணியபுரம் பகுதியில் உள்ள அங்கன்வாடி மையம் பார்வையிடப்பட்டதில் மேற்படி மையத்தில் தண்ணீர் வசதி இல்லாமல் உள்ளது. மேலும் குழந்தைகளுக்கான கழிப்பறை சுத்தமான முறையில் பராமரிக்க இயலவில்லை. முகப்பு பகுதியில் சுற்றுச்சுவர் அமைத்து தருமாறும், உட்புறம் தளம் சீரமைத்து தருமாறும் மேற்படி அங்கன்வ2ாடி மையத்தில் பணியாற்றி வரும் பணியாளர் கேட்டுக் கொண்டுள்ளதால் மேற்படி அங்கன்வாடி மையத்தில் மராமத்துப்பணி சுற்றுச்சுவர் கட்டவும் மற்றும் ஆழ்துளை கிணறு அமைத்து தண்ணீர் வசதி செய்யவும் உத்தேச மதிப்பீடு ரூ.370000/–க்கு தயாரிக்கப்பட்டுள்ளதினை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு– கல்வி நிதியில் மேற்படி பணியை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 6982/2017/இ1) | **2872.**<br>அங்கீகரிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | **<u>பொருள் எண். 40</u>**<br>தூய்மை இந்தியா திட்டம் சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் கடிதம் ந.க.எண்.26458/2016/P1 நாள். 29.05.2017 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.1540/2015/அ4 நாள். 23.09.2017–ன்படி தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திருநெல்வேலி மண்டலத்தில் உள்ள 20 நகராட்சிகளிலும் தனியார் வழி நியமனம் செய்து பணிகளை மேற்கொள்ள விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்யும் பொருட்டு தகுதி வாய்ந்த நிறுவனத்தினை தேர்வு செய்யும் பொருட்டு மாநில அளவிலான நாளிதழில் பிரசுரம் செய்ய ஒப்பந்தப்புள்ளி நடைமுறை சட்ட விதிகளின்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. இதை குறித்த விளம்பரம் செய்தமைக்கான மொத்த கேட்புத் தொகையினை ரூ.1,55,820/– அனைத்து நகராட்சிகளும் சமவிகிதத்தில் ஒவ்வொரு நகராட்சிக்கும் தலா ரூ.7791/– வீதம் அருப்புக்கோட்டை நகராட்சிக்கு அனுப்ப நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் உத்தரவிட்டுள்ளார்கள். எனவே கோவில்பட்டி நகராட்சியிலிருந்து ரூ.7791/–ஐ வங்கி வரைவோலை அல்லது காசோலையாகவோ அருப்புக்கோட்டை நகராட்சி ஆணையாளருக்கு அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 6740/2017/எச்1) | **2873.**<br>அங்கீகரிக்கப்பட்டது. |

(ஒம்) க. அச்சையா,
தனி அலுவலர்
கோவில்பட்டி நகராட்சி

//உண்மை நகல்//

ஆணையாளர்,
கோவில்பட்டி நகராட்சி